NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p1
**Date:** 30 September 2026

# உயர்நிலைப்பள்ளிக்கு மாறும்போது அழுத்தத்தைக் குறைக்க முயற்சி: டேவிட் நியோ




கொள்கை ஆய்வுக் கழகத்தின் 'பெற்றோரும் கல்வியும் 2026' கருத்தரங்கில் கல்வி இரண்டாம் அமைச்சரும் கலாசார, சமூக, இளையர்துறை அமைச்சருமான டேவிட் நியோ முடிவுரை ஆற்றினார். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

**யோகிதா அன்புச்செழியன்**

கல்வி முறையில் ஒருவருக்கொருவர் போட்டியிடும் சூழலை சீரமைக்கும் நோக்கில், தொடக்கப்பள்ளி இறுதியாண்டுத் தேர்வு, நேரடிப் பள்ளிச் சேர்க்கைத் திட்டம் போன்ற அதிக மன அழுத்தத்தை ஏற்படுத்தும் அம்சங்களைக் கல்வி அமைச்சு விரிவாக ஆராயவுள்ளது.

போட்டியிடும் சூழலைக் குறைக்கும் நோக்குடன், அமைச்சின் 'கல்விக் கலந்துரையாடல்கள்' திட்டத்தின் அடுத்த கட்டம் தொடங்கவிருப்பதாக கல்வி இரண்டாம் அமைச்சர் டேவிட் நியோ அறிவித்தார்.

குறிப்பாக, மாணவர்களும் பெற்றோரும் அதிக அழுத்தத்தைச் சந்திக்கும் தொடக்கப் பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளிக்கு மாறும் கட்டத்தின் மீது இது கவனம் செலுத்தும்.

கலாசார, சமூக, இளையர் துறை அமைச்சருமான திரு நியோ, கொள்கை ஆய்வுக் கழகத்தின் (ஐபிஎஸ்) 'பெற்றோரும் கல்வியும் 2026' கருத்தரங்கில் செவ்வாய்க்கிழமை (செப்டம்பர் 29) முடிவுரையாற்றியபோது இதைத் தெரிவித்தார்.

கல்வி முறையிலிருந்து போட்டியையும் மன அழுத்தத்தையும் முற்றிலுமாக அகற்றுவது அரசாங்கத்தின் நோக்கமன்று. மாறாக, ஆரோக்கியமற்ற போட்டி பிள்ளைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியை ஆக்கிரமித்துவிடாமல் தடுப்பதே கல்வி அமைச்சின் முதன்மை இலக்கு என்றார் அவர்.

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட விரிவான கருத்துகளின் அடிப்படையில், போட்டியிடும் சூழலை ஊக்குவிக்கும் மூன்று முக்கிய அம்சங்கள் ஆராயப்படும்.

தொடக்கப்பள்ளி இறுதி யாண்டுத் தேர்வை (பிஎஸ்எல்இ) நீக்குவது, ஒத்திவைப்பது, மதிப்பெண் பிரிவுகளை மாற்றியமைப்பது அல்லது உயர்நிலைப்பள்ளிக்கு மாணவர்களைத் தரம் பிரிக்கும் முறையை மாற்றுவது போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இருப்பினும், குலுக்கல் முறையால் பதற்றம் அதிகரிப்பது, வசிப்பிட ஒதுக்கீட்டால் சமூகக் கலப்பு குறைவது, தொடக்கப்பள்ளியிலிருந்தே நேரடியாக உயர்நிலைப்பள்ளிக்குச் செல்லும் முறையால் முதல் வகுப்பிலேயே போட்டி தீவிரமடைவது போன்ற மாற்றுவழிமுறைகளின் தாக்கங்களையும் அமைச்சர் சுட்டினார்.

"விருப்பப்பட்ட பள்ளிகளில் இடம் கிடைப்பதை மதிப்பெண்களே தீர்மானிக்கும்போது, பெற்றோரால் தளர்வடைய முடியாது என்ற சூழல் உருவாகிறது," என்று அமைச்சர் நியோ குறிப்பிட்டார்.

மாணவர்களின் கல்விசாராத் திறமைகளை அங்கீகரிக்கக் கொண்டுவரப்பட்ட நேரடிப் பள்ளிச் சேர்க்கைத் திட்டம் (டிஎஸ்ஏ), பல குடும்பங்களுக்குப் பதற்றத்தை அதிகரிக்கும் 'இரண்டாவது போட்டிப் போர்க்களமாக' மாறியுள்ளதாக அவர் கூறினார்.

இத்திட்டத்தின்கீழ் பயிற்றுவிக்கப்பட முடியாத இயல்பான திறமைகளுக்கும் ஆர்வங்களுக்கும் முன்னுரிமை அளிப்பது, டிஎஸ்ஏ இடங்களைப் பள்ளிகளிடையே பரவலாக விநியோகிப்பது போன்ற மாற்றங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

yogitaa@sph.com.sg

கூடுதல் செய்தி - பக்கம் 3

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.